42

அற்புத ரஸம்

42

10 APR 1944
MADRAS

டி.கே.சி.

புது மலர் நிலையம்

சந்திரநாத்

ரமா

"சரத் சந்திரருடைய நாவல் என்ருல் அது நன்ருயிருக்கும் என்று தமிழர் களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. அதிலும் ஸ்ரீ ஆர். ஷண்முகசுந்தரத் தின் மொழி பெயர்ப்பு என்ருல், "எங்கே புத்தகம்?" என்பதைத் தவிர வேறு கேள்வியேகிடையாது."

"கல்கி" 10—1—44.

இன்னும் ஸ்ரீ ஆர். ஷண்முகசுந்தரம் எழுதிய சொந்த நாவல், சிறு கதைகள் அற்புதமான வடிவில் தாயராக இருக் கின்றன. உடனே எழுதுக.

புதுமலர், 8

அற்புத ரஸம்

894.8114

ஆசிரியர்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

புதுமலர் நிலையம்

கோயமுத்தூர்

பதிப்புரிமை]

[விலை அணா 6

முதற்பதிப்பு: ஜனவரி, 1944

03114

P. S. G. தொழிற்பள்ளி அச்சு நிலையம்,
பூளைமேடு, கோயமுத்தூர்.

அற்புத ரஸம்

திருநெல்வேலியிலிருந்து ரயிலில் வந்து கொண்டிருந்தேன். ரயில் ஒரு ஸ்டேஷனில் நின்றது. அங்கே இரண்டு வார்த்தைகளை ஒரு விளம்பரப் பலகையில் பார்த்தேன். "நவ ரஸ" என்ற இரண்டு வார்த்தைகளும் கண்ணுக்குத் தெரிந்தன. "அடடே, இங்கே ஏதோ கலைச் சங்கம் கூட்டி யிருக்கிறார்களோ?" என்று நினைத் துக் கொண்டே யிருந்தேன். ரயில் நகர்ந்தது, "கிளப்" என்ற வார்த்தையும் தெரிந்தது. சரி. 'நவரஸ கிளப்' தான், சங்கம் அல்ல வென்று தெரிந்து கொண்டேன்.

நம்முடைய சகோதரிகள் பரிமாறுகையிலே ஆறு ரஸம் என்று சொல்கிறார்கள். ஆனால் ஆறு அல்ல, அறுபது ரஸங்களைப் பார்க்கிறோம். எத்தனையோ ரஸங்கள் அருமையாக வருகின்றன. கிளப்காரர் நவரஸம் என்று ஒன்பதோடு நிறுத் திக் கொண்டார்; ரொம்ப அடக்கமுள்ளவர் தான்.

நாம் பேச எடுத்துக் கொண்ட ரஸம் வேறு துறையில். நாவினால் அல்ல, உள்ளத்தினால்

அனுபவிக்கும் ஒன்பது ரஸங்கள் அவை. உண்மையில் ஒன்பது அல்ல. ஷேக்ஸ்பியர், கம்பர் முதலானவர்கள் எண்ணிறந்த ரஸங்களைக் கொடுக்கிறார்கள். பாகு பாடு பண்ணினால் ஒவ்வொரு ரஸத்திலுமே எத்தனையோ சாயல்கள் தோன்றும். சௌகரியத்துக்காக நம்முடைய முன்னோர்களைப் போல், நாமும் ஒன்பதென்றே வைத்துக் கொள்வோம்.

நவரஸங்களில் **அற்புதம்** ஒன்று. அற்புதத்தைப் பற்றிப் பேசுகையில் மற்ற ரஸங்களும் வந்து ஊடாடலாம். ஆனால் அற்புதத்தையே பார்க்க வேண்டும். மற்ற ரஸத்தை மனக் கண்ணில்ப் படாதபடி அகற்ற வேண்டும்.

சண்பக மரம் ஒன்று இருக்கிறது. அந்த மரத்தின் மீது முல்லைக் கொடியும் வளமாகப் படர்ந்து பூத்துக் கிடக்கிறது. முல்லைப் பூக்களைப் பற்றிப் பேசும் போது உள்ளே பொதி பட்டுக் கிடக்கும் சண்பகப் பூவை மறந்துவிட வேண்டியதுதான். ஒரு உணர்ச்சியை விட்டு விட்டு மேலே வந்து திகழும் மற்றொரு உணர்ச்சியையே பார்க்கவேண்டும்.

சரி, 'அற்புதம்' என்றால் என்ன: சாமானியமாய் அல்லாத காரியம் ஒன்றைக் கண்ட மாத்

திரத்தில், உள்ளத்தில் எழுகிற உணர்ச்சிதான் சிலவேளைகளில் எக்களிப்பும் உண்டாகும். அதுவும் அற்புதத்தோடு ஒட்டும்.

அற்புதத்தைப் பார்க்கவேணுமா? எங்கே பார்த்தாலும் அற்புதந்தான்.

இருட்டிய உடன் முற்றத்திற்கு வருகிறோம். ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. செவ்வாய் கிரகத்தைப் பார்க்கிறோம். இன்ன தேதி இன்ன நிமிஷம் உச்சிக்கு வரவேண்டுமென்று பஞ்சாங்கத்தில் சொல்லியிருக்கிறது. அப்படியே வந்து விடுகிறது. செவ்வாய்க் கிரகத்தினிடம் ஏதாவது 'காலண்டர்' உண்டா? இப்படி எல்லாம் நினைத்தால் அற்புதந்தான்.

மழை பெய்கிறது. பெய்த உடனே அந்தப் பருவத்துக்குரிய எத்தனையோ புல் பூண்டுகள் தளிர்த்துப் பூத்து நிற்கின்றன. போன போன இடத்தி லெல்லாம் அவைகளைக் காண்கிறோம். "அடடா! இவைகளுக்கும் 'காலண்டர்' தெரியுமோ?" என்று எண்ணுகையில் அற்புதந்தான்.

பூனையானது குட்டி போடுகிறது. அது முன்னமேயே ஒரு நல்ல இடத்தைப் பார்த்து

வைத்திருக்கிறது. குட்டி போட்டதும் பாது காக்க ரொம்ப வசதியெல்லாம் செய்து கொள் கிறது. ஆண் பூனை வராமலும் பார்த்துக் கொள் கிறது. இது மட்டுமா? பூனை தன் குட்டியைத் தூக்கும் சமர்த்தே சமர்த்து! குட்டியை மெது வாகக் கௌவிப் போகிறதைப் பார்த்தால் அதி சயமாக இருக்கும். கௌவிப் பிடிப்பதில் தனி யான லாகவம். சுவர்களையும், விட்டங்களையும் தாவிப் போய் குட்டியை மெள்ள வைத்து விடுவதும் அற்புதந்தான்.

மனுஷன் இருக்கிருன்; அவனிடம் எத்தனை யோ அற்புதங்கள். சிப்பாய் தன் உயிரையே கொடுக்கப் போகிருன்? எதற்காகப் போகிருன்? அது அற்புதந்தான்!

பொய் சொல்வது என்று ஒரு காரியம். அது வெறுப்பானகாரியம். ஆனாலும் உண்மை யை மறைத்து விட வேண்டும் என்று கச்சை கட்டிக்கொண்டு கோர்ட்டுக் கூண்டில் ஏறுவான். ஏறியதும் உண்மை சொல்கிறதாகச் சத்தியம் செய்வான். அவ்வளவு தான். உண்மை அப்படி யே வெளி வந்து விடும்! இதுவும் ஒரு அற்புதம்.

சர். ஸி. வி. ராமன் தனது ஆராய்ச்சிகளை எடுத்துச் சொல்லுகையில் ஒரே வியப்புத்தான்.

அறிகலை (சையன்ஸ்) நிபுணர்கள் நிமிஷந்தோறும் அற்புதங்களைக்கண்டு கொட்டிக் கொண்டு தானிருக்கிறார்கள்.

ஆனால், இந்த அற்புதங்கள், இப்போது நாம் நடத்தும் பரிசீலனைக்குச் சம்பந்தப்பட்டவை அல்ல. நாம் பேசப் போவது வேறு விஷயம். அது விஷயத்தோடு நிற்பதல்ல, உணர்ச்சியோடும் நிற்பதல்ல. உள்ளத்தில் உண்டான உணர்ச்சியைத்தான் (வியப்பைத்தான்) வெளியிடும் முறையைக்குறித்து நிற்பதே. அதாவது நாம் பேசப் புகுவது சையன்ஸ் அல்ல; ஆனால் ஆர்ட்டு. ஆர்ட்டு என்றால் **அனுபவ வெளியீட்டுக்கலை** என்று சொல்லலாம். இதற்கு மட்டுமே **கலை** என்ற வார்த்தையை உபயோகப்படுத்துவது நல்லது. சையன்ஸ்களை **இயல்கள்** என்று வைத்துக் கொள்ளலாம். சைக்காலஜியை **உள இயல்** என்றும், எஞ்சினீரிங் சையன்ஸைத் **தச்சியல்** என்றும் சொன்னால் பொருந்தும்.

இனி கலைக்கு நேராக வரலாம். ஒரு ரசிகன் ஒரு விஷயத்தைப் பார்த்து அதிசயிக்கிறான். உள்ளத்திலே எத்தனை வருஷமானாலும் இருந்து கொண்டே இருக்கும் அது. அந்த ஆனந்தத்தை அற்புதத்தை வெளியிடுகிறான். கவியாக வெளியிடுகிறான். கவி பிறந்து விட்டால் அந்த

அதிசயத்துக்கு உருவம் ஏற்பட்டு விடுகிறது. உருவம் ஏற்படுவதுதான் கலை.

பரத நாட்டியத்தில் பாவங்களை முகத்தில் வெளியிடுகிறார்கள். உள்ளத்தில் உதிக்கும் உணர்ச்சிகள் முகத்தில் தெரியவேண்டும். அப்போது பாவம் வருகிறது என்கிறோம். நாட்டிய இலக்கணத்தைப் படித்து அல்ல; கண்ணிலும், உதட்டிலும், புருவத்திலும் எல்லா அங்கங்களிலும் உள்ளுணர்ச்சி பிரவேசித்து வருகையில்த் தான் கலை ஆகிறது. அதுதான் 'மெய்ப்பாடு,' அபிநயம்—இது ஒரு கலை.

இதைவிட நுட்பமான கலை சங்கீதம். அற்புத உணர்ச்சி என்றால் அது சங்கீதத்தில் வெளிப்படவேண்டும். சங்கீதத்துக்குப் பாவந்தான் பிரதானமானது. இதய பாவம் இல்லாது போனால் மட்டமான சங்கீதந்தான். நம்முடைய முன்னோர்கள் பாவத்தையே முக்கிய அம்சமாக எண்ணினார்கள். மேல் நாட்டார் கூட எண்ணுகிறார்கள். அடையாற்றிலே ஒரு டச்சுக்கார அம்மையார் இருந்தார். மேல் நாட்டுச் சங்கீதத்தை பாவத்தோடு பயின்றவர். அந்த அம்மையாருக்கு நம் சங்கீதத்தைக் கேட்க வேண்டுமென்ற ஆவல். வீணை தனம்மாள் வீட்டுக்குப் போய், சங்கீதத்தைக் கேட்டு ரொம்பவும் அனுபவித்

தார், வியந்தார். பிறகு அந்த அம்மையார், "இந்த நாட்டு வழக்கப்படி நான் என் ஆனந்தத்தைத் தெரிவிக்கிறேன்" என்று சொல்லித் தனம்மாளுக்கு நமஸ்காரம் செய்தார்.

நம் சங்கீதத்தை டச்சு தேசத்து அம்மையார் அனுபவித்து விட்டாரே என்று எனக்கு ஆச்சரியமாயிருந்தது. சங்கீதம் வேறு நாட்டுக்குக் கொண்டு போகக் கூடியதல்லதான். ஆனலும் மேல் நாட்டார் கூட பாவத்தை வைத்தே சங்கீதத்தின் பண்பை பார்க்கிறுர்கள் என்று தெரிய வந்தது.

இனி கவி. கவி என்பது தானுக வர வேண்டிய அரிய வஸ்து. முன்னேர்கள் ரொம்ப நன்ருகச் சொன்னுர்கள், ஆயிரம் வருஷத்துக்கு ஒரு முறைதான் கவிஞன் பிறப்பான் என்று.

கவிக்கு உருவம் அமையவேண்டும். அமைந்து விட்டால் பிரமாதமான காரியந்தான்.

கவியில் உருவத்தைத் தான் ஆங்கிலேயர்களும் பாராட்டுகிறுர்கள். ஆனல், ஆங்கிலத்தில் நாம் இதை அனுபவிக்க முடியுமா? ரொம்பக் கஷ்டம். முடியாது என்றே சொல்லலாம். விஷ

யம் விளங்கும். நானும் எவ்வளவோ முயற்சித்துப் பார்க்கிறேன். தத்துவங்களெல்லாம்—ஏ. ஸி. பிராட்லிக்குத் தெரிவதைவிட, ஷேக்ஸ்பியரில் வரும் ஞானிகள் சொல்வதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரிகிறது. வசனமாக விஷயம் தெரிகிறதே ஒழிய கவியை அனுபவிப்பது கஷ்டமாய்த்தான் இருக்கிறது.

தமிழுக்கு வருவோம். செய்யுளிலே **பாவ**மான உருவம் அமைந்து வரவேணும். சும்மா எதுகை மோனை வைத்துக் கட்டி விட்டால் கவி ஆய் விடும் என்று எண்ணி விடக் கூடாது. ரோஜாப் புஷ்பத்தை இதழ் வேறு, காம்பு வேறாகப் பிய்த்து உரலில் போட்டு இடித்து எடுத்து வந்து, "இந்தாருங்கள் ரோஜாப்பூ" என்று சொன்னால் நமக்கு எப்படி இருக்கும்?

உருவம் என்றால் உணர்ச்சியின் சாயல் வரவேண்டும். விஷயத்தை சொன்னால் காணாது. விஷயம் அல்ல முக்கியம். உணர்ச்சியும் அல்ல. விஷயமும் உணர்ச்சியும் உருவத்துக்காக உபயோகப்படும் காரியங்கள். உரம், மண், தண்ணீர் எல்லாம் எப்படி புஷ்பத்துக்காக உதவுகின்றனவோ அதே மாதிரி, விஷயம், உணர்ச்சி, சிருஷ்டி செய்வதில் ஏற்படுகிற உத்சாகம், எல்லாம் சேர்ந்து உருவத்தை உண்டாக்கித் தந்தன என்றுதான் சொல்லவேண்டும்.

தாகூரது நூல்களைப் படித்தால் இந்த உண்மை நன்ருய்த் தெரிய வரும். ஒரு செய்யுளை நாம் பார்ப்போம். முருகன் எழுந்தருளிய ஒரு குன்று. குன்றின் வளத்தைப் பார்த்திருந்தால் தெரியும். (எங்கள் ஊர் குற்ருல மலைக்குப் பக்கம்) நானும் நண்பர்களும் குற்ருல மலையில் சண்பக டாவி அருவியைப் பார்த்து விட்டு வந்தோம். நேரம் அந்திப்பொழுது; வரும் போது ஓரிடத்தில் திரும்பினேம். ஒரே வாசனை. எதனுடைய வாசனை. காட்டு மல்லிகையின் வாசனை. இப் போது நான் சொல்வது ஒரு பூர்வமான பழைய பாட்டு. பாட்டென்ருல் எப்படி வர வேண்டும்? உருவம் வருகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அந்தக் காலத்தில் 'மௌவல்' என்று காட்டு மல்லிகைக்குப் பெயர். முருகன் குன்றம் எப்படி இருக்கிறது?

மாலை மணம்கமழ

மௌவல் முகைவிரியும்

பாவம் வரும் அடுத்தபடியாக

— எந்தை குன்றம்!

இதைச் சொன்ன மாத்திரத்தில் உருவமே, அதாவது அற்புதத்தின் சாயலே வந்து விட்டது. எங்கள் இறைவன் முருகன் இப்பேர்ப்பட்ட

குன்றில் அல்லவா இருக்கிருன் என்று வியந்து சொல்லும் பாவம் தெரிகிறது.

காலே மணிக்குவ ளே,
காதலர்போல் கண்விழிக் கும்
— எந்தை குன் றம்

காதலர் ஒருவர் மற்றவரை விழுங்குகிற மாதிரி அப்படியே வெறித்துப் பார்ப்பார்கள். குவளே மலரும் அப்படிப் பார்க்கிறது! இனி:

மூங்கில்கள் அங்கே காற்றிஞல் அப்படியும் இப்படியுமாக வாள் வீசுவது போல ஆடும். விஷயத்தை விளங்க வைக்கவேண்டி டெனிஸனி லிருந்து ஒரு உதாரணம். டெனிஸன் இம்மாதிரி காட்சிகளேக் கண்டு அனுபவித்தவர். நன்ருகச் சொன்ஞர்.

"ஒரு சிறு மேகக் குஞ்சு கையை நீள விட்டு விட்டு, மரம் மரமாக மெள்ளத் தவழுகிறது."

"A tender cloud puts forth an arm and creeps from pine to pine"

எனக்குச் செய்யுளில் இருக்கும் விஷயந் தான் தெரிகிறது. கவி உருவத்தின் நயம் தெரிய

வில்லை. இங்கிலாந்து தேசத்துக்குப் போய் பயின்ற காரணத்தால் புரபசர் சுவாமிநாதன் அவர்களுக்குத் தெரிய வரும்.

முருகன் குன்றத்திற்கு வருவோம். அங்கேயும் ஒரு மேகக் குஞ்சு: பக்கத்தில் நின்ற மூங்கில் காற்றில் ஆடிக் கொண்டிருந்தது; ஆடும் போது என்ன நேர்ந்தது?

ஆடு கழைகிழிக் கும்
அந்தண் புயலிற் றே
— எந்தை குன் றம்!

[கழை—மூங்கில்; அந்தண் புயல்—அழகியதாயும், ஜில் என்றும் இருக்கிற மேகம்; புயலிற்றே—புயலை உடையது.]

நேரம் சாயங்காலம். ஆறு மணி. பிறைச் சந்திரன் உச்சியில் தோன்றுகிறது.

நீடு கழை மேல்
நிலா மதியம் நிற்கு மே
— எந்தைகுன் றம்!

இப்போது கவியை முழு உருவத்தோடு பார்க்கலாம்.

"மாலை மணங்கமழ
மௌவல் முகைவிரியும்
— எந்தைகுன்றம்!

காலை மணிக்குவளை
காதலர் போல்விழிக்கும்
— எந்தைகுன்றம்!

ஆடு கழைகிழிக்கும்
அந்தண் புயலிற்றே
— எந்தைகுன்றம்!

நீடு கழைமேல்
நிலாமதியம்நிற்குமே
— எந்தைகுன்றம்!

இந்தக் கவியில் உருவம் இருக்கிறது. அற்புத பாவம் இருக்கிறது. அபிநயம் காட்டும்போது முகத்தில் அற்புத பாவம் இருக்கிறது, என்று சொல்வது போல.

இந்தச் சமயத்தில் ஒரு விஷயத்தை ஞாபகப் படுத்திக் கொண்டால் நலம். மேலே சொன்ன கவியில் அற்புதம் தெளிவாய் இருக்கிறது.

அந்த உணர்ச்சி வெளியே வந்து துலாம்பர மாய்த் தெரிகிறது. கவிக்குள் வருகிற விஷயத் தைப் பார்த்தால் பக்தி அனுபவமும் வர்ணனை அனுபவமும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் உருவத்தைப் பார்த்தால் அற்புத பாவமே விளங்குகிறது. சண்பக மரத்தின் மீது முல்லைக் கொடி படர்ந்து ஒரே வெண்மை மயமாய்ப் பூத்திருப்பதைப் பார்ப்பதுபோல் அற்புத உருவத்தை மாத்திரம் பார்க்கிறோம்.

நம்முடைய பள்ளிக்கூடங்களில் கவியைப் பற்றிப் பேசும்போது உருவத்தை விட்டு விட்டு விஷயத்தை மட்டும் பார்க்கிறோம். அது காரண மாகவே கவிஉருவம் என்பது கொஞ்சமும் இல்லாத செய்யுள்களையே கவியென்று எண்ணி யும் பாராட்டியும் வர நேர்ந்து விட்டது. ஆக வே கவிக்கும் கவி அல்லாத வெற்றுச் செய்யு ளுக்கும் வித்தியாசம் தெரியாமல்ப் போய் விட்டது.

யுத்த சம்பந்தமான ஒரு வியப்பை இனிப் பார்க்கலாம். அதற்கு முன் ஒரு விஷயம். டார்வின் என்ற பெரியார், "மனுஷன் எப்படிப் பிறந்தான்? இயற்கைத் தாய் வயற்றிலே எப்படி

வளர்ந்து வந்தான்?" என்பதை எல்லாம் நிரூபித்துக் காட்டினர்.

அவர் தென் அமெரிக்காவுக்கு போன போது ஒரு காட்சியைக் கண்ட அனுபவத்தைச் சொல்லியிருக்கிருர். அங்கேயுள்ள சிவப்பு இந்தியர்களுக்குள் சதா சண்டையும் சச்சரவும் தான். அந்த முரட்டு ஜாதியார்கள் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குப் போய் போர் புரிவார்கள். இரு கக்ஷியிலும் அநேகர் இறந்து விழுவார்கள். அவர்களுடைய மாமிசங்களை பருந்து, கழுகு, நாய், நரி முதலானவைகள் தின்னும். சிவப்பு இந்தியர் ஒரு ஊரிலிருந்து புறப்பட்டால், கலியாணத்துக்காகவே இருக்கலாம். ஆனலும் அந்தப் பருந்து முதலான பிராணிகள் கூடவே பின் தொடருமாம். டார்வின் சொன்னதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு நம்முடைய கவியைப் பார்க்கலாம்.

களப்பாளன் என்ற வீரனிடம் ஒரு யானை இருந்தது. அந்த யானை, எதிரியைத் தெரிந்து நாசம் செய்யும். இதற்காக யானையை நன்ருகப் பழக்கி வைத்திருந்தார்கள். "கொல் யானை" என்றே அந்த யானைக்குப் பெயர். களப்பாளனது யானை புறப்பட்ட உடனே யுத்தம்

நடக்கப் போகிறது என்று தெரிந்துவிடும். எதற்கெல்லாம் தெரிந்தது?

படுபருந்தும் பேயும்
நரியும்செந் நாயும்
கொடிகழுகும் இத்தனையும்
கூடி, வடிவுடைய
கோமான் களப்பாளன்
கொல்யானை போர்வேட்டுப்
போமாறு போமாறு போம்.

இதிலே கடைசி அடியைப் பார்த்தால் உருவம் அமைந்திருப்பது தெரியும். பருந்தும் நாயும் இருபது முப்பதாக கூடவே போகுமாம். இது வியக்கத்தக்க விஷயந்தான். இந்த விஷயத்துக்கு அற்புதமாக உருவம் வந்து விட்டது. விஷயம், பாவ, உருவத்தோடு கிடப்பதையே கவனிக்க வேண்டும். அப்படி ஒன்று கிடந்து விட்டால் மேல் நாட்டவர் பிரமாதப் படுத்துவார்கள்.

இனிக் காதலைப் பற்றிப் பார்ப்போம். மகாபலிபுரச் சிற்பங்களை, அரிய சிற்ப வல்லாரைக் கொண்டு உண்டாக்கிய நந்தி வர்மனைக் குறித்த பாட்டு.

ஒரு பெண் நந்தியினிடம் காதல் கொண்டு விடுகிருள். அப்படியே பலர் காதல் கொள்கிருர்கள். ஆனல் இந்த ஒருத்திக்கு மாத்திரம் அரசன் அருள் கிடைக்கிறது. ஒரு நாள் இரவு நந்தி வர்மன் வந்தான். அவளுக்கோ கோபம். ஊடலில் இறங்கி விட்டாள். என்ன சொல்லியும் அவள் கேட்கவில்லை. பாவம், அவளுடைய அன்பில் ஈடுபட்ட மன்னன் என்ன செய்வான்? அவள் காலில் விழுகிருன். அவன் தலையே மிதி படுகிறது! உதை படுகிறது!

காலையில் அந்தப் பெண்ணைப் பார்க்க தோழி ஒருத்தி வருகிருள். அவளிடம் தன் எக்களிப்பைச் சொல்லுகிறதாகப் பாட்டு. காதல் ரஸம்தான் உள்ளாகக் கிடப்பது. ஆனல் அற்புத ரஸமே மேலிடுகிறது. ஏதோ தற்பெருமையைக் கொழிக்கிறேன் என்று எண்ணி விட வேண்டாம் என்று தோழியைப் பார்த்துச் சொல்லுகிருள்:

என்னையா னேபுகழ்ந்தேன்
என்ருதே! எப்புவிக்கும்
மன்னர்கோன் நந்தி
வரதுங்கன் பொன்முடியில்
மேல்வருகும் தொண்டை
விரை நாறும் இன்னமும், என்
கால்வருடும் சேடியர்தம்
கை!

"சேடியர் என் காலைப் பிடித்தார்கள். தொண்டை மலரின் வாசனை அவர்கள் கைக்கே ஏறிவிட்டது பார்த்தாயா, என்ன!" என்று வருகிறது எக்களிப்பு. விஷயம் எல்லாம் லகுதான். அந்தக் காலத்தில் இப்படிப் பாடும்படி நமக்கு சக்தி இருந்தால் நந்தியின் ராஜ்யத்தில் பாதி நமக்குக் கிடைத்து விடும். அதிசயத்தின் உருவமானது மேலே சொன்ன பாடலில் அருமையாய் அமைந்து விட்டது.

நூல்களுக்கு 'விமர்சனம்' எழுதுவதைக் கொஞ்சம் பார்ப்போம். புஸ்தகம் சின்னதாக நூறு பக்கம் இருக்கும். ஆனால் விமர்சனம் அதற்கு எழுபத்தைந்து பக்கம் இருக்கும். அதைப் படிப்பதற்குள் பெரிய கஷ்டமாய்ப் போய் விடும். நான் ரொம்பவும் இந்தக் கஷ்டத்துக்கு உள்ளாகி இருக்கிறேன். ஒரு ஆங்கில ஆசிரியருக்கும் இது மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்து விட்டது. அவர் நம் ஆசாமிகளைப் பற்றியே சொன்ன மாதிரி இருக்கிறது. லாரென்ஸ் ஸ்டெர்ண் என்ற ஆங்கில ஆசிரியர் இருநூறு வருஷங்களுக்கு முன் சொன்னார். ரொம்ப நன்றாய்ச் சொன்னார்.

"எங்கே பார்த்தாலும் பயனில் சொல் மயம். பயனில்சொல் என்றால் எத்தனை எத்தனையோ

துறையில் எல்லாம்! ஏமாற்றுவதற்காகச் சொல்லும் பயனில்சொல் ரொம்பவும் கெடுதலாயிருக்கலாம். ஆனால் நூலாராய்ச்சி பற்றிய பயனில் சொல்லோ சகிக்க முடியாத தனி ஹிம்சை!" இதை பொன் எழுத்துக்களிலே பொரித்து பள்ளிக்கூடங்களிலே மாட்டி வைக்கவேண்டும்.

குறளாசிரியர் அற்புதமான நூலை எழுதினார். தர்மம் என்னும் விஷயம் தெரிவதே கிடையாது. தப்பும் தவறுமாகவே அதைப் பற்றிய பேச்செல்லாம். இதில் கஷ்டம் என்ன இருக்கிறது என்கிறார் வள்ளுவனார். "ஏழைக்கு ஏதாவது கொடுத்தால் தர்மம் என்று எண்ணிக் கொள்" என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். நல்ல முறையில் பாடு பட்டு, நிலத்தை உழுது பயிர் செய்வதிலே ஆனந்தம் இருக்கிறது. புலவர்களுக்கும், மற்றவர்களுக்கும் நெல்லைவாரிக் கொடுப்பதிலே தனி ஆனந்தம். அப்போது தான் பொருளே இன்ன தன்மையது என்று தெரிய வரும்; உண்மையான ஆனந்தமும் இன்ன தன்மையது என்று தெரிய வரும்.

சுற்றத்தார் சுற்றப் படவொழுகல்,

செல்வந்தான் —

பெற்றத்தால்பெற்ற பயன்.

இந்தக் குறளிலேயே அறம் இது, பொருள் இது, இன்பம் இது என்று குறிப்பிட்டாய் விட்டது. கடவுளைப் பற்றிச் சொன்ன அதிகாரத்தில், 'எங்கிருந்து வந்தோம்?' என்பதைச் சொல்லுகிறார். கடவுள் தத்துவத்துடன் ஒட்டியே வந்திருக்கிறோம். இதை உணர்ந்து கொண்டால் முக்தி நிலை தான்.

திருவள்ளுவரின் அருமையான கருத்துக்களில் ஈடுபட்ட ஒரு புலவர் பாடும் பாடலைப் பார்க்கலாம்.

அறனறிந்தேம், ஆன்ற
பொருளறிந்தேம்,

"பொருள் இருந்தால் எத்தனையோ நன்மைகளைச் செய்யலாமே" என்று சொல்லுகிறார் ஆசிரியர் ரஸ்கின். 'ஆன்ற' என்கிற வார்த்தை ரஸ்கின் சொன்ன உண்மையைக் குறிக்கிறது.

இங்கே ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். 'அறன்', 'பொருள்', 'திறன்' இந்த சொற்களோடு 'அறிந்தேம்' என்கிற சொல் சேர்ந்து ஒரு சீராக நிற்கிறது. ஆனல் அற்புத ரஸம் பிறப்பதற்கு வேண்டிய உத்தி, 'வீடு'

வேருகவும் 'தெளிந்தேம்' வேருகவும் கடைசியில் நின்று ஒலிப்பதில் தான் கிடக்கிறது. செய்யுளின் முழு உருவத்தையும் முதலிலிருந்து கடைசி வரையும் பார்த்தால் அற்புத பாவம் இன்னும் அதிகமாக விளங்கும்.

"அறனறிந்தேம், ஆன்ற
பொருளறிந்தேம், இன்பின்
திறனறிந்தேம், வீடு
தெளிந்தேம்! மறன்எறிந்த
வாளார் நெடுமாற,
வள்ளுவனுர் தம்வாயால்க் —
கேளா தனஎல்லாம்
கேட்டு!"

ஆனந்தமான அதிசயம் எப்படித் தெளிவாய் விளங்குகிறது பாருங்கள்!

இலக்கிய அனுபவம் பற்றி இன்னெரு கவி.

நம்மாழ்வார் ஆயிரம் பாடல்கள் திருமாலைக் குறித்துப் பாடினுர். திருமால் பாற் கடலில் எங்கோ ஒரு ஓரத்தில் கிடக்கிருர். எந்த இடமென்று தெரியாது. அவருக்கு வந்த யோகத்

தைப் பார்த்தீர்களா? எப்பேர்ப்பட்ட யோகம் அது!

சாதாரணமாக லக்ஷ்மியின் கடைக் கண் நோக்கு இருந்தாலே, செல்வமெல்லாம் ஒரு வருக்கு வந்து விடும். பக்கத்திலேயே சதா அவள் இருக்கும் படியான பாக்கியம் கிடைத்து விட்டால் யோகத்தைப் பற்றிச் சொல்லவா வேண்டும்!

சேரா தளஉள
வோ! திரு சேர்ந்தார்க்கு:
வேதம்செப் பும்

பேரா யிரம், பொன்
முடியா யிரம், நறை
பெய்துள வத்

தாரா யிரம்நம்
திருக்குரு கூர்ச்சட
கோபன்சொன் ன

ஆரா அமுத
கவியா யிரம் அவ்
அரியினுக் கே.

"ஆரா அமுத கவியாயிரம் அவ் அரியினுக் கே" என்கிற கடைசி அடி வரும்போது அற்புத

ரஸம் வந்து நம் இதயத்தில் பெருக்கெடுக்கும். இதயம் விம்மும், கவி உருவத்தை அறிவதற்காகக் கடைசி இரண்டடியையும் இன்னொரு முறை பாடுவோம்.

நூறா யிரம், நம்
திருக்குரு கூர்ச்சட
கோபன்சொன் ன

ஆரா அமுத
கவியா யிரம்அவ்
அரியினுக்கே!!!

அதிசய உருவத்தைக் காண இன்னும் ஒரு பாட்டு.

திருமூலர் என்ற பெரியார் ஒரு பெரிய விஷயத்தைத் தெளிவு படுத்துகிறார். கடவுள் எங்கும் நிறைந்துள்ள வஸ்து. அந்த ஒரு பொருள், வான வெளியில் எவ்வளவு தூரம் எட்டிப் போனாலும் வெற்றிடம் என்பது இல்லாதபடி நிறைந்துள்ளது. மேலே போனாலும் சரி, பாதாளத்துக்குப் போனாலும் சரி, அணுவென்றும் அணுவுக்குள் அணுவென்றும், இறுதியில்லாதபடி அந்தப் பொருள் செறிந்து கொண்டே போகும் தன்மையது தான். ஆனால், இப்படியே சொல்லிக்

கொண்டிருந்தால் சோர்வு ஏற்பட்டு விடும் மனம் பற்றாது. அதைக் கவியில் அமைத்து விட்டாலோ, ஞாபகத்தில் அப்படியே இருந்து விடும்.

மேல் நாட்டார் 'சிரியஸ்' என்ற நட்சத்திரத்தைப் பற்றி ரொம்பவும் ஆராய்ந்திருக்கிறார்கள். அதன் தூரம் எவ்வளவு என்பதைக் கணக்கிட்டார்கள். பூமி, சூரியனைச் சுற்றிக் கொண்டு வருகிறது. ஒன்பது கோடி மைல் சூரியனுக்கும் பூமிக்கும் இடையே தூரம். அதனால் சூரியனிடமிருந்து நமக்கு ஒளி வர எட்டு நிமிஷம் ஆகிறது. சில நட்சத்திரங்களிடமிருந்து ஒளி நமக்கு வருவதற்கோ ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஆகுமாம். அப்படியானால் நட்சத்திரங்கள் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன என்பதை ஒருவாறு ஊகிக்கலாம். கீழேயும் பக்கத்திலேயும் இப்படித் தான். டிண்டால் என்ற பொருளியல் ஆசிரியர் ஆல்ப்ஸ் மலை மேலே இருந்து கீழ் நோக்கிப் பார்த்தார். அந்த நேரத்தில் ஒரே மேகப் படலம் எங்கும் பரவி பூமியை அப்படியே மறைத்துக் கிடந்தது. அதைப் பார்த்தவுடன், "ஆகா! நாம் வாழும் பூமியும் நானும் என் உள்ளத்தில் எழுகிற அதிசயமும் கோடானு கோடி வருஷங்களுக்கு முன் உருவ வேறுபாடு குண வேறுபாடு ஒன்றும் இல்லாத மேக பிண்டமாய்த் தானே சூரியனோடு

ஓட்டிச் சுற்றி வந்திருக்க வேண்டும். இந்த மேகப் படலம் அந்த அபூர்வமான மேக பிண்டத்தை அல்லவா நினைப்பூட்டுகிறது!'' என்று ஒரே அதிசயத்தில் மூழ்கி விட்டார்.

இப்போது திருமூலர் அடைந்த அதிசயத்தைப் பார்க்கலாம்.

'' ஆர்அறி வார்எங்கள்
அண்ணல் பெருமையை !
ஆர்அறி வார்அந்த
ஆழமும் நீளமும் !
பேர்அறி யாத
பெருஞ்சுடர் ஒன்(று), அதின்
வேர்அறி யாமை
விளம்புகின் றேனே ''

தனக்குத் தெரியாததை விளக்கப் போகிறாராம்! தான் கண்டது அவ்வளவு அதிசயமான பொருள்!

இந்த விதமாக ரஸங்கள் கலைகளிலே வர வேண்டும்; சிற்பம், ஓவியம், நாட்டியம், இசை—பிறகு கவி—இவைகளிலே பாவத்தோடு ரூபமாக வெளி வரவேண்டும். ரூபமாக வெளி வரவில்லை

யானுல் கலேயல்ல. வியப்பாகிய உணர்ச்சி மக்களுக்குச் சாமானியமான காரியம். அதாவது அற்புத உணர்ச்சி சாமானியம். ஆனுல் கவியில் அற்புத உருவம் வருவதென்ருல் அபூர்வந்தான், தெய்வீகம் தான்.

இந்த முறையிலேயே மற்ற ரஸங்களேயும் ஆராய்ந்தால் உண்மையான கவி உணர்ச்சி உண்டாவதற்கு ஏதுவாகும். கவியுணர்ச்சி மாத்திரம் அல்ல, மற்றக் கலேகளிலும் திருத்தமான உணர்ச்சி உண்டாகக் காரணமாகும்.

புது மலர் நிலைய
புத்தகங்கள்

1. ஜமீந்தாரிணி
2. மூன்று மாதம் கடுங்காவல்
3. நாகம்மாள்
4. கட்டமுகி
5. கன்னிகா ஸ்திரீ

புதிதாக மலர்ந்த மலர்கள் :

6. சந்திரநாத்
7. ரமா
8. அற்புத ரசம்
9. ஜமீந்தாரிணி (இரண்டாம் பதிப்பு)
10. கவர்வ பங்கம்
11. நந்தா விளக்கு
12. பூவும் பிஞ்சும்
13. கன்னிப் பெண்

ஆனந்த நூலகம்

இலக்கியப் பூங்காவிலே இது ஒரு அதி அற்புதமான மாறுதல் காலம். வாழ்க்கையை வளப்படுத்துவது இலக்கியம் என்பதில் என்ன சந்தேகம்? புதிதாக மலரும் மலர்களின் நறுமணத்தைத் தமிழ் மக்களுக்குத் தந்து மட்டற்ற மகிழ்ச்சியை உண்டாக்கவேண்டும் என்பதே எமது ஆனந்த நூலகத்தின் அவா.

புதுமலர் நிலையத்தின் அரிய வெளியீடுகள் அனைத்தும் எம்மிடம் கிடைக்கும். மற்ற பதிப்பகங்களின் எல்லாப் புத்தகங்களுமே எங்களிடம் உண்டு. தங்கள் தேவையைத் தெரிவிக்கிறீர்களா?

ஆனந்த நூலகம்

வடக்கு வெளிவீதி — மதுரை